செ.வெ.எண்: 577 நாள்: 08.10.2021

**புதுக்கோட்டை மாவட்டத்தில்**
**கோவிட் தொற்றால் பெற்றோர்களை இழந்த 24 குழந்தைகளுக்கு ரூ.76 லட்சம் மதிப்பிலான மறுவாழ்வு நிவாரண உதவித்தொகைக்கான காசோலைகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.கவிதா ராமு, இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார்.**

---

புதுக்கோட்டை மாவட்டத்தில் கோவிட் நோய் தொற்றால் பாதிக்கப்பட்டு பெற்றோர்களை இழந்த குழந்தைகளுக்கு மறுவாழ்வு நிவாரண உதவித்தொகைக்கான காசோலைகளை மாவட்ட ஆட்சியரகத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.கவிதா ராமு, இ.ஆ.ப., அவர்கள் இன்று (08.10.2021) வழங்கினார்.

பின்னர் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்ததாவது;

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தமிழகத்தில் கோவிட் தொற்றால் பெற்றோர்களில் ஒருவரை இழந்த 18-வயதிற்குட்பட்ட குழந்தைகளுக்கு மறுவாழ்வு நிவாரண நிதியாக தலா ரூ.3 லட்சம், பெற்றோர் இருவரையும் இழந்த 18 வயதிற்குட்பட்ட குழந்தைகளுக்கு தலா ரூ.5 லட்சம் வழங்கப்படும் என அறிவித்துள்ளார்கள்.

அந்த வகையில், புதுக்கோட்டை மாவட்டத்தில் 31.05.2020 முதல் 31.08.2021 வரை கோவிட் தொற்றால் பாதிக்கப்பட்டு உயிரிழந்த 363 நபர்களின் குடும்பங்களில் மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலர் மற்றும் பணியாளர்கள் மூலம் நேரடியாகவும், தொலைபேசி மூலமாகவும் களவிசாரணை மேற்கொண்டதில் 79 குழந்தைகள் 18 வயதிற்குட்பட்டவர்கள் எனக் கண்டறியப்பட்டனர். இதில் 2 பெண் குழந்தைகள் தாய் மற்றும் தந்தையை இழந்தவர்கள். மீதமுள்ள 77 குழந்தைகள் (ஆண்-38, பெண்-39) தாய் அல்லது தந்தையை இழந்த குழந்தைகள்(தாயை இழந்த குழந்தைகள் -5, தந்தையை இழந்த குழந்தைகள்-72) எனவும் கண்டறியப்பட்டது.

இதில் முதற்கட்டமாக பெற்றோர் ஒருவரை மட்டும் இழந்த 19 (ஆண்-8, பெண்-11) குழந்தைகளுக்கான நிவாரண நிதி தலா ரூ.3 லட்சம் வீதம் ரூ.57 லட்சம் மதிப்பில் நிவாரண நிதியுதவி குழந்தைகளின் பெற்றோர்களது வங்கி கணக்கில் நேரடியாக செலுத்தப்பட்டுள்ளது.

மேலும் 2-வது கட்டமாக கொரோனா நோய் தொற்றால் பாதிக்கப்பட்டு பெற்றோர் இருவரையும் இழந்த 2 குழந்தைகளுக்கு தலா ரூ.5 லட்சம் வீதம் ரூ.10 லட்சம் மற்றும் பெற்றோர் ஒருவரை மட்டும் இழந்த 22 குழந்தைகளுக்கு தலா ரூ.3 லட்சம் வீதம் ரூ.66 லட்சம் என ஆக மொத்தம் ரூ.76 லட்சம் மதிப்பிலான மறுவாழ்வு நிவாரண உதவித்தொகைக்கான காசோலைகள் இன்றையதினம் வழங்கப்பட்டுள்ளது இதனை பயனாளிகள் உரிய முறையில் பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.கவிதா ராமு, இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலர் ஜா.குணசீலி மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

---

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், புதுக்கோட்டை.**